வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.103/12

வழக்கு சாட்சி - அ.சா.9

| | | |
|---|---|---|
| பெயர் | பிரபாகரன் | ஜாதி |
| தந்தைபெயர் | | தொழில் |
| கிராமம் | | சமயம் |
| தாலுக்கா | | வயது |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.23

**( 2, 3** எதிரிகள் இறந்துவிட்டனர்**. 1, 6, 10, 11** எதிரிகள் ஆஜர் இல்லை**. 1, 6, 10, 11** எதிரிகள் சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. 4, 5, 7, 8, 9** எதிரிகள் ஆஜர்**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அல்லிநகரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல்எஸ்டேட் தொழில் செய்துவருகிறேன். ஊஞ்சாம்பட்டி கிராமத்தில் உள்ள சர்வேஎண்.186 ல் 3 ஏக்கர் நிலம் ஆதியில் திம்மன்மாதாரி, அழகர்மாதாரி ஆகியோருக்கு பாத்தியப்பட்டிருந்தது. திம்மன்மாதாரி மகன் மாரிமாதாரி 1 1/2 ஏக்கரை சின்னசீனி செட்டியார் என்பவருக்கு விற்றுவிட்டார். சின்னசீனி செட்டியார் சுப்பையாகுடும்பன் என்பவருக்கு விற்றுவிட்டார். சுப்பையா குடும்பன் இறந்தபிறகு அவரின் வாரிசுகளான பெருமாயி , மகன் போஸ், தொந்தி, ஆகியோர்கள் 1.9.94 ல் லட்சுமணன் என்பவருக்கு மேற்படி சொத்தை பொறுத்து பவர் பத்திரம் எழுதிகொடுத்தார்கள். மேற்படி அழகர்மாதாரி இறந்துபிறகு அவரின் வாரிசுகளான மீனாட்சி, மாரியம்மாள் , சௌந்தராஜன் 10.10.1980 பத்திர எண்.2910/80 ன்படி வெள்ளிமலையம்மாளுக்கு கிரயம் கொடுத்தார். வெள்ளிமலையம்மாள் அவரின் வாரிசுகளான மாரியம்மாள், ராஜாத்தி ஆகியோர்களுக்கு 10.6.99 ல் பத்திரஎண்.3094 ன்படி 76 செண்ட் இடத்தை தான செட்டில் மெண்ட் செய்து கொடுத்தார். அதே தேதியில் வெள்ளிமலையம்மாள் மகன் காளிராஜ் என்பவருக்கு ஆவணஎண்.3095/99 ன் படி 74 செண்டை தானமாக கொடுத்துள்ளார். வெள்ளிமலையம்மாள் மகளகளான ராஜாத்தி, மாரியம்மாள் ஆகியோர்கள் பெற்ற 76 செண்டை பொறுத்து கண்ணன் என்பவருக்கு 5.10.05, ஆவண எண்.70/05 ன் படி பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். அதன்படி கண்ணன் என்பவருக்கு உரிமையான மேற்படி சொத்தில் 76 செண்டை வெள்ளிமலையம்மாள் மகன் காளிராஜ் என்பவருக்கு ஆவணஎண்.6511/05 ன்படி கிரயம் கொடுத்துள்ளார்.மேற்படி சொத்தை காளிராஜ் என்பவர் செல்லையாவுக்கு ஆவணஎண்.6964/05 ன்ப டி கிரயம் கொடுத்துள்ளார். அதன்பின்னர் செல்லையாவிடமிருந்து 7.2.07 ல் ஆவண எண்.104/07 ன் படி நான் பவர் வாங்கினேன். மேற்படி பவர் பெற்ற 1 1/2 ஏக்கரை சென்னையில் வசிக்கும் ராஜகோபால் என்பவர் மனைவி வாசுகி என்பவருக்கு 27.2.07 ல் கிரயம் கொடுத்தேன். அதன்பின்னர் பட்டா மாற்றம் அனைத்தையும் அவர் செய்துக்கொண்டார். மேற்படி இடத்தை சுப்பையா குடும்பன் வாரிசுகளான போஸ், தொந்தி ஆகியோர் தங்களுக்கு 1 1/2 ஏக்கர் பாத்தியம் என்று சொல்லி மேற்படி இடத்தை ஆக்கரமிப்பு செய்ததாக கூறினார்கள். சுப்பையா குடும்பன் வாரிசுகள் நாங்கள் தான் என்று கூறி செல்வம் மற்றும் அவரை சேர்ந்த சிலர் கூறியதாக மேலும் கெப்பனனன் என்பவருக்கு மேற்படி செல்வம் ஆவணஎண்.4702/09 ன் படி கிரயம் செயது கொடுத்ததாகவும் தெரிந்துக்கொண்டேன். அதுசம்மந்தமாக புகார் கொடுக்கப்பட்டு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 6, 10, 11, 4, 5, 7, 8, 9** எதிரிகள் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.